78

கட்டி

எம். ஜி. ஆரும் வியாதிகளும்

ஆகஸ்டு '87

FREE E - BOOKS , www.thamizham.net.,

எம். ஜி. ஆரும் . . . வியாதிகளும்

எம்.ஜி.ஆர். கதைவசனம் எழுதப்போகிறார்.

எம்.ஜி.ஆர். பேசினார். கவர்னரை சந்தித்தார். கையை ஆட்டினார். கட்டி அணைத்தார். —இப்படி பத்திரிகைகளும், வானொலியும், தொலைக்காட்சியும் வரிந்து கட்டிக் கொண்டு எம். ஜி. ஆர் பற்றிய IMAGE—ஜ கலையாமல் காப்பாற்றி வருகின்றன.

அதே வேளையில்—

மயக்கம்போட்டு விழுந்தார். செயல்படவில்லை எனவே பதவி விலக வேண்டும்—என்று எதிர் கட்சிக்காரர்கள் கேட்டு வருகிறார்கள்.

இதற்கிடையில்—

எம்.ஜி.ஆர்க்கு எதாவது ஆகிவிடப்போகிறதே என்று மண்ணெண்ணை டின்னுடன் தீக்குளிக்க ரசிகர்கள் தயாராக இருக்கிறார்கள். கடை களையும், தெருவிளக்குகளையும் உடைக்க ரவுடிகள் கும்பல் தயார் நிலையில் வைக்கப் பட்டிருக்கிறது.

எம். ஜி. ஆர் இப்போது மக்களின் உணர்வோடு விளையாடிக் கொண்டிருக்கிறார். இவரது வியாதிகளைப்பற்றி அரசு வெளியிட் டால் என்ன? அமெரிக்கா போகிற தேதியை மிகச்சரியாக அறிவித்தால் என்ன? இவை யென்ன ராணுவ ரகசியங்களா?

சிறுநீரகக் கோளாறு இருக்கிறது. மூளை சிந்திக்க மறுக்கிறது. சுயநினைவு போய்விடு கிறது பேச முடியவில்லை. ரத்தத்தில் சர்க்கரை அதிகமாகப் போய்விட்டது. —இப்படி வியாதி களைப் பட்டியல் போட்டால் எம் ஜி. ஆரின் இமேஜ் போய்விடவாபோகிறது?

பெரியாரும், பக்தவசலமும், வியாதிகளோடுத் தான் செயலாற்றி வந்தார்கள். அப்போது அவர்கள் எந்த பதவியிலும் இல்லை. எம். ஜி. ஆருக்கு வந்த வியாதி தமிழகத்துக்கு வந்த வியாதி மாதிரி. ஓர் அரசு ஊழியருக்கு இவ்விதமான வியாதிகள் இருப்பின் இந்த அரசு கட்டாய ஓய்வு அளிக்குமா அளிக்காதா?

—நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

வட்டி 15 காசு பற்றாகுறை 8 காசு

ஒரு ரூபாயின் உண்மையான மதிப்பு 15 காசுக்கும் குறைவு. எனினும் அரசு தரப்பில் ரூ. 1க்கு வரவு செலவு என்னவென்றால்......

வரவு			செலவு	
எக்ஸைஸ் வரி	23 பைசா	—	மத்திய திட்ட செலவு	21 பைசா
கஸ்டம்ஸ் வரி	18 ,,	—	பாதுகாப்பு	17 ,,
வருமான வரி	4 ,,	—	வரி பகிர்வு	13 ,,
கார்ப்பரேசன் வரி	5 ,,	—	மாநில திட்ட உதவிக்கு	12 ,,
மற்றவரி	1 ,,	—	திட்டமில்லா செலவு	12 ,,
உள்நாட்டுக் கடன்	17 ,,	—	வட்டி	15 ,,
வெளிநாட்டுக் கடன்	4 ,,	—	மானியம்	8 ,,
வரியில்லா வருமானம்	12 ,,	—	திட்டமில்லா உதவி	2 ,,
மற்ற மூலதன வருமானம்	8 ,,			
பற்றாகுறை	8 ,,			

மாதம் ரூ. 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்

எங்கள் பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாசிட் (FIXED DEPOSIT) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு மிகக்கவர்ச்சிகரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்களுக்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

மலர்ச்சி நிதி — AP 638, அண்ணா நகர், சென்னை - 600040 — Advt.

FREE E - BOOKS , www.thamizham.net.,

? கல்யாணத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன...?

பெரியார் : பாமர ஜனங்கள் கல்யாணம் என்றால், வேலைக்கு ஆள் வைப்பது போலக் கருதுகிறார்கள். புருஷனும் அப்படியே நினைக்கிறான். புருஷன் வீட்டாரும் தங்கள் வீட்டு வேலைக்கு ஒரு பெண் கொண்டு வருவதாகக் கருதுகிறார்கள். பெண் வீட்டாரும் வீட்டு வேலைக்கே தயார் செய்து தங்கள் பெண்ணை விற்றுக் கொடுக்கிறார்கள்.

? ஏன் கவிதையைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

மலையாள கவிஞர் கடம்மனிட்ட ராம கிருஷ்ணன் : ஒரு காலத்தில் சங்கீதத்தையே நான் உன்னதமான கலையென்று எண்ணிக் கொண்டிருந்தேன். நுண்கலைகள் (FINE ARTS) எல்லாவற்றினோடும் இப்போது எனக்கு நல்ல விருப்பமுண்டு. ஆனால் முழுமையான அர்த்தம் பொருந்திய சம்மேளனத்திற்கு, அதைப் பிறருக்கு உணர்த்தும் Communicabilyக்கு கவிதை எனக்கு ஒரு நல்ல சாதனமாகப் பட்டது.

துளிகள்

? எப்போதும் மகிழ்ச்சியோடிருக்க உங்கள் யோசனை என்ன?

பெஞ்சமின் பிராங்களின் : மகிழ்ச்சி ஒரு வண்ணத்துப் பூச்சி மாதிரி. அதை துரத்திக் கொண்டு சென்றால் பிடிக்கு அகப் படாது. பேசாது அமர்ந்து கொள்ளுங்கள். உங்கள் மீது தானாக வந்தமர்ந்துவிடும்.

? உண்மை புறக்கணிக்கப் படுகிறதா...?

சர்ச்சில் : ஆம்! உண்மையின் மீது தட்டுத்தடுமாறி மக்கள் எப்போதாவது விழுந்த சுருக்கில் எழுந்து கொண்டு எதுவும் படாத மாதிரி உதறிக் கொண்டு, போய் விடு கிறார்கள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஊருக்கு ஒரு முகம்

இந்திய நேரம் 5.55. நம்மூர் மணிக் கூண்டை பார்த்தால் நான் பொறுப்பல்ல. டெல்லியின் பிரதமர் இல்லை இல்லை இந்தியப் பிரதமர் ராஜீவ் குடும்ப சமேதராய் கூடவே கொண்டு போயிருந்த தேர்தல் சிரிப்பை ரஷ்யாவில் லெனின் மைதானத்தின் எல்லா திசைகளிலும் தெளித்தார்.

ரஷ்யாவில் நடந்த இந்திய கலைவிழாவை எம். எஸ். சுப்புலட்சுமி இசையோடு தொடங்கினார். ராகத்திற்கு தலையாட்டவும் போட்டோவிற்காகவும் பாரம்பர்ய மேட்டுக் குடியினர் குரூப் போட்டோவிற்காக காத்துக் கிடந்தனர்.

'தடங்களுக்கு வருந்துகிறோம்' தூர்தர்ஸன் (டி.வி) பல்லிளித்தது. பிறகு பிரதமரும் கோர்பசேவும் நடந்து வர இரண்டு பக்கங்களும் பூ தூவினார்கள்.

''உள் நாட்டில் நம் காதில் சுற்றிய பூவையெல்லாம் அங்கு காலில் சுற்றி விட்டார்களா?'' ரமேஷ் கமெண்ட் அடித்தான்.

''இதுக்குத்தான் கண்டதுகளையெல்லாம் அழைத்து வராதேன்னேன்'' வீட்டுக்காரி எரிஞ்சு விழுந்தாள். திடீரென்று கரெண்ட் கட்டாகிவிட்டது. மீண்டும் வந்தபோது.

கலைவிழா நடந்தது. இந்திய பிரதமரும், ரஷ்ய ஜனாதிபதியும் புன்னகையை விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது–

சுப்புடு ஆபீஸ் விட்டு வந்து விட்டார். டி. வி. முன் கூடியிருந்தவர்களைக் கண்டு எரிந்து விழுந்தார்.

''ஒம் புள்ளையாண்டானுக்கு செருப்படி வேணுங்குதா? கண்ட தாழ்ந்த ஜாதி கபோதிங்கள் டி. வி. பார்க்க அழைச்சுட்டு வந்துட்டானா. விரட்டுடி அவனுவல......''

''சோவியத்தும் இந்தியாவும் நல்ல நண்பர்கள். இரண்டற கலப்பதே இந்தியப் பண்பாடு'' ராஜீவ் டி. வி. யில் ஆங்கிலத்தில் தேசிய பொய்யை தெரிவித்துக் கொண்டிருந்தார்.

— **குடந்தை துரை சண்முகம்**

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஒற்றுமை வலிவு!

ஜுலை 14 முதல் 10 வரை அஞ்சல், மற்றும் ஆர். எம். எஸ் துறையினர் வேலை நிறுத்த போராட்டம் நாடுதழுவிய அளவில் நடத்தப் போவதாக அறிவித்திருந்தனர். ஆனால் முன்னடியாகவே அவர்கள் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

புற நிலை ஊழியர்கள், பகுதிநேர அஞ்சல் எழுத்தர் என்ற சுதந்திர நாட்டின் கொத்தடிமைகள் பிரச்சனை உட்பட, R. M. S மற்றும் அஞ்சல் சேவை சீரழிவின் காரணத்திற்கு அரசாங்கத்தின் நடவடிக்கை, இயந்திரமாகுதலில் ஏற்படும் பிரச்சனைகள் உட்பட 13 அம்சக் கோரிக்கைகள் இப்போராட்டத்திற்கான காரணமாக அறிவித்திருந்தனர். இதில் பெரும்பாலானஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் மற்றும் சிலவற்றைப்பற்றி பேச்சு நடத்த அழைத்திருப்பதாகவும் தெரிகிறது.

ஏறத்தாழ ஒரு வாரம் அஞ்சல் சேவை இல்லாமல் போனால் அரசாங்கத்தின், நாட்டின் நிலைமையை மத்திய அரசு யோசித்து இருக்க வேண்டும்

இதில் சிறப்பு அம்சம் ஒன்று;

இதற்கு முன் ஒவ்வொரு போராட்டத்தின் போதும் கருத்து வேறுபாடு காரணமாக வெவ்வேறு சங்கங்களாக பிரிந்து இருந்த தொழிற்சங்கங்கள் இப்போராட்டத்திற்காக ஒன்றிணைந்தன.

தனக்காகமட்டுமல்லாமல் மக்களுக்காக அவர்கள் நன்மையையும் கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்ட போராட்டம் இது. வெற்றி பெற்றமைகுறித்து மகிழ்ச்சி.

சரியான, தேவையான, இது போன்ற போராட்டங்களுக்கு மட்டுமே பொது மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும்.

—சோலை இசைகுயில்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

என்ன செய்யலாம்?

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணிக்கும், எனக்கும் ஒரு விவாதம்.

"சூடிதர், நூரி, மேக்ஸி, மிடி' இதெல்லாம் போட்டா தப்பு என்னங்க? சின்ன வயசுலே பொண்ணுங்க தாராளமாப் போடலாமே!"

இப்படி நான் சொன்னதும், அந்தப் பெண் மணிக்கு ஆத்திரமான ஆத்திரம்...

"சூடிதார், மேக்ஸி, மிடி இதெல்லாம் பார்க்க லட்சணமாவா இருக்குது? த்தூ! சினி மாக்காரி மாதிரி ஒடம்பைக் காட்டிக் கிட்டு... ஐயையே! எனக்குப் பிடிக்காது".

"ஏங்க? தளர்த்தியாப் போட்ற மாடர்ன் டிரெஸ் நல்லாத் தாங்க இருக்குது. பஸ்ஸுக்கு சைக்கிளுக்கு எல்லாத்துக்குமே சூடிதார் வசதிதான்."

"வசதியைப் பார்த்தா? புடவை கட்டற மரியாதை வருமா? ஆயிரம்தான் சொல்லுங்க! புடவை கட்டறவதான் அடக்கமான பொண்ணு...".

"சிட்டுக் குருவிகளாத் திரியற இந்த வயசிலே போடட்டுமே"

"அப்புறம் அடங்குமா? ரேஸ் குதிரை மாதிரி ஒரு திமிரு வந்திடும் பாருங்க, அந்த மாதிரி டிரஸ் போட்டா..."

சலிப்புடன் கிளம்பினேன். எதிரே வந்தாள் அந்தப் பெண்மணியின் மகள்.

புடவையைத் தொப்புள் தெரியக் கட்டி யிருந்தாள். ரேஸ்குதிரை மாதிரியான திமிர் தெரிய, புடவையை அலட்சியமாகத் தூக்கித் தோளில் போட்டிருந்தாள்...

அவள் அம்மா வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன. இது மாதிரி ஆட்களை என்ன செய்யலாம்?

— அரசு மணிமேகலை

FREE E - BOOKS , www.thamizham.net.,

விளம்பரம் கேட்ட நல்ல (?) பாம்பு

விஞ்ஞானத்தால் எவ்வளவுதான் முன்னேறி இருந்தாலும் மூடநம்பிக்கைகள் வலிந்து பரப்பப்பட்டு வருகின்றன. திருப்பதி வெங்கடாசலபதியின் கலியுக மகிமை என்று துண்டு விளம்பரம். அதில்— திருப்பதி கோயிலில் நல்லப் பாம்பு ஒன்று, பூசாரி முன் மனித வடிவம் எடுத்தது. "கொஞ்சநாள் பூமியில் அவதாரம் எடுத்து தர்மத்தைச் செய்பவர்களுக்கு நன்மையையும், நாசம் செய்பவர்களுக்கு தகுந்த தண்டனையும் அளிப்பேன். இதை எல்லோரும் அறிய 200 நோட்டீஸாவது அச்சடித்து விளம்பரம் செய்தால் நன்மை, இல்லையெனில் கஷ்டம்" என்று சொல்லி மறைந்ததாம்.

இதை அலட்சியம் செய்தவர்கள் அடைந்த துன்பத்தையும், அச்சடித்து விநியோகித்தவர்கள் பெற்ற நன்மையையும், பெற்றவர்களைப் பற்றி முழு முகவரி இல்லாமல் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏதோ நோட்டீஸ் என்று எடுத்துப் படிப்பவர்களுக்கு இந்த நோட்டீசை ஏன் எடுத்தோம் என்றுதான் தோன்றும். அன்றாட உணவுக்கு அல்லல் படுவோரும் நோட்டீசை அச்சடித்து விட்டால் துன்பம் நீங்கிவிடும் என்று கனவு காணத்தொடங்கி விடுகிறார்கள். உழைப்பில் நம்பிக்கையின்மையும், தன் துன்பத்திற்கு மூலக்காரணத்தை ஆராய விடாமல் செய்யும் எண்ணத்தையும் இந்த விளம்பரம் ஏற்படுத்துகிறது.

பாவம் செய்தவர்கள், பணம் வைத்திருப்பவர்கள் நோட்டீஸ் அச்சடித்துவிட்டால் மட்டும் யோக்கியர்களாகி விடமுடியுமா? என்பதை மக்கள் சிந்திக்கவேண்டும். இது போன்ற விளம்பரத்தால் ஏமாறும் கிராம நகர மக்களுக்கு உண்மையை விளக்கி, தெளிவு தர இளைஞர்கள் முன்வர வேண்டும். ○

— மறுமலர்ச்சி பித்தன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

மாம்பழம்...மாம்பழம்...மாம்பழம்...மாம்பழம்

மாம்பழம்

பழங்கால கிராமியப் பாடல்களிலும், சமய நெறிமுறைகளிலும் உலகில் மாம்பழத்தின் பிறப்பிடம் இந்தியாவே என்று சான்று பகர்கின்றன.

இந்தியாவில் முதலில் காலடி எடுத்து வைத்த போர்த்துகீசிரியர்கள் தமிழர்களிடம் இருந்து தான் மாங்காய் என்ற சொல்லைக் கற்று, மேற்கத்திய நாடுகளுக்கு மாங்காயின் மகிமையை பறைசாற்றியதாக என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா ஆதாரம் காட்டுகிறது. நம் நாட்டில் 1மில்லியன் ஹெக்டேருக்கு மேற்பட்ட நிலபரப்பில் 1000க்கும் மேற்பட்ட மாம்பழ வகைகள் பயிரிடப்படுகின்றன. இந்தியாவின் மாம்பழ உற்பத்தி முதன்மை பெற்ற இடங்கள் தமிழகம், ஆந்திரம், மகாராஷ்ட்டிரம் மேற்கு வங்கம், உத்திரபிரதேசம்.

ஆந்திராவில் இருந்து ரூ 2 லட்சம் பெறுமானமுள்ள 320 டன் மாம்பழங்களுடன் ஸ்பெஷல் ரயில் விடப்பட்டுள்ளது. கல்கத்தாவில் 1 நாளைக்கு 1 லட்சம் ரூபாய்க்கு மாம்பழங்கள் விற்பனையாகின்றன. இதுதவிர ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. மகாராஷ்டிரா அல்போன்ச மாம்பழம் 3 வாரங்களுக்கு அழுகாமல் இருக்கும் லக்னோவில் கிடைக்கும் தாசஹரி வகையை ஒவ்வொரு ஆண்டும் எலிசபெத் அரசிக்கு நேரு அனுப்பி வைப்பாரம்.

வறட்சியான காலத்திலேயே அதிகமாக மாம்பழங்கள் உற்பத்தியாகும். மங்கும் காலத்தில் மாங்காய்? மாம்பழம் ஏழை பணக்காரர் பேதமின்றி அனைவரையும் இனிப்பில் ஆழ்த்துகிறது.

— நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

கள்ளசாராயக் கடத்தல் **வாசகர் குமுறல்**

28—7—87 அன்று சென்னை பல்லவன் போக்குவரத்து கழக வண்டியில் கள்ள சாராயம் கடத்தல். பல்லவன் வண்டி நெம்பர்: T.M.L. 3475. R D NO: 811 எண்: 195 ரூட் சைதாப்பேட்டை to முட்டுகாடு படகுத் துறை. இது பொதுமக்களின் ஊர்தி. இதில் பொது மக்களுக்கு இடமின்றி காசுக்காக கள்ள சாராயம் கடத்தல் செய்யப்படுகிறது. காய்கறி மூட்டைக்கு கீழ் 20 லிட்டரில் இரண்டு கேன் டிரைவரின் எதிர் சீட்டில் பதுக்கி வைக்கப் பட்டிருந்தது. 1 லிட்டர் சாராயத்திற்கு 2 ரூபாய் கமிஷன் — ஓட்டுநர்க்கும், நடத்து னர்க்கும் பங்கு உண்டு. முட்டுகாட்டிலிருந்து சென்னை திருவான்மியூர் பஸ் நிலையம் அருகில், பஸ் திரும்பும் இடத்தில் 40 லிட்டர் கள்ளசாராயம் இறங்கியது. திருவான்மியூர் காக்கிச் சட்டை மாட்டிக் கொண்டு பலவகை யில் காசு பறக்கும் காவல்காரர்களுக்கும் பங்கு உண்டு என்று நம்பப்படுகிறது. முட்டுகாட்டு வழியாக செல்லும் அனைத்து பல்லவன் போக்குவரத்து கழகத்திலும் தினசரி 2 கேன் ஆக வந்து கொண்டிருக்கிறது.

பத்திரிகைகள் தினமும் பிடிபட்ட சாராய கும்பல்களை புகைபடத்துடன் வெளியிடு கிறார்கள். முட்டுகாடு, மாமல்லபுரம், கோவளம். அங்கங்கு சாராய சாம்ராஜ்ஜியம் உருவாகிறது. அந்த சாம்ராஜ்ஜியத்திற்கு ராஜாக்கள் அரசியல்வாதிகள் தான். தேவாரத் தின் துணிச்சலை அரசியல்வாதிகள் பாராட்டு கின்றனர். கருங்குரங்குகளுக்கு கை விலங்கு மாட்டி தேவாரம் நடவடிக்கை எடுத்து, சட்டம் என்னும் வெளிச்சத்தில் நிற்க வைப்பாரா?

— A. ராமமூர்த்தி, மந்தைவெளி.

உதயம் கவிதைத் தொகுப்பு நூலில் பங்கு கொள்ள விரும்பும் இளம் படைப்பாளிகள் (30—8—1987-க்குள்) தமது கவிதையுடன் (20 வரிக்குள்) ரூ. 25/- அனுப்புக. செப்டம்பர் 15-ல் நூல் வெளியிடப்படும். ரூ. 25/-க்கான புத்தகப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

முகவரி: **சிலம்பு பதிப்பகம்**, செல்லியம் பாளையம், மின்னாம்பள்ளி P.O. சேலம்-6.

FREE E - BOOKS , www.thamizham.net.,

வில்லங்கமில்லாத வீட்டு மனைகள், வீடுகள்
ரூ. 5,000/- முதல் ரூ. 50,000/- வரை
பெற தொடர்புக்கு:
அமர் ரியல் எஸ்டேட்ஸ்
21, கஸ்தூரிபாய் நகர் 2 வது
மெயின் ரோடு
அடையாறு, சென்னை-600 020

வறட்சி

அக்கம் பக்கம்
எங்கும் வறட்சி.
ஒரு கொக்கு
சோர்வாக வந்தமர்ந்தது
வெற்றுக் குடத்தின் மேல்

— கார்க்கிராசன்.

உரிமை

ஒவ்வொரு மனிதனுக்கும்
எழுத்துரிமை பேச்சுரிமை
என்று ஓரளவு கொடுப்பவர்கள்
ஊமையராய் செவிடராய்
கும்பிடு போட மட்டும்
பயன்படும் கைகளைக் கொண்ட
ஒருவரைத் தேர்ந்தெடுத்து
'ஜனதிபதி' என்கிறார்களே!

— இரண்டாம் நக்கீரன்

வேல் டைப்பௌண்டரி

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லாவித அச்சக சாமான்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-7 தொ, பேசி. 27087

ஆசிரியர்: கு. நாராயண பாரதி,
வெளியிடுபவர்: கி. இராமச்சந்திரன்,
அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன்,
ரவீந்திரன் பிரஸ், 137 டாக்டர் நடேசன் ரோடு
சென்னை-600005.
முகவரி: 1494, அண்ணா நகர்,
சென்னை-600040

சுட்டி பதிவு எண்: TN/MS (N)/317

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஒலி பெருக்கக் கேடுகள்

11—07—87 இரவு தொலைக்காட்சியில் ஒலிப் பெருக்கத்தின் தொல்லைகளையும், அதனால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளையும் விவரிக்கும் வகையில் அமைந்த பேட்டி வரவேற்கத்தக்கதுதான். இதன் நோக்கம் விழா நடத்தும் பொதுமக்களோ வண்டி ஓட்டும்டிரைவர்களோ அநாவசியமாக ஒலிப்பெருக்கம் செய்யக்கூடாது என்பதே! தேர்தலில் நிற்கும் கட்சிப்பிரமுகர்கள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை (!?)

விஞ்ஞான ரீதியில் ஒலி பெருக்கத்தின் கேடுகளை உணர்ந்தவர்கள் பெரும்பாலும் அநாவசியமாக ஒலி பெருக்கம் செய்வதில்லை. பந்தயத்தில் பங்கெடுப்பவர்களைப் போல் அநாவசியமாக மணியடித்துக்கொண்டு இண்டு இடுக்குகளில் புகுந்து முன்னேறும் சைக்கிள் காரர்கள், சோதனை ஓட்டம் செய்கிறேன் என்று மோட்டார் வாகனத்தை சப்தத்தோடு ஓட்டும் மெக்கானிக்குகள், மணவிழா, காது குத்துவிழா, பூப்பு நீராட்டுவிழா எதுவானாலும் ஒலிப்பெருக்கி இன்றி நடத்துவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் மக்கள்... இவர்கள்தான் ஒலி பெருக்கியின் சீர் கேடுக்களை உணர வேண்டியவர்கள். ஆனால் அவர்களுக்கு ஆங்கிலத்தில் ஒலிபெருக்கினார்கள் தொலைகாட்சி நிலையத்தினர். முழுவதையும் ஆங்கிலத்தில் ஒலிபரப்பவேண்டிய அவசிய மென்ன...?

டி. வி. யில் வரும் விளம்பரங்களைப் பாருங்கள். பொருள்கள் நன்கு விற்பனையாக அந்தந்த மொழிகளில் விளம்பரம் செய்கிறார் கள். அதுபோல பொதுமக்களுக்குப் புரிய வேண்டும் என்று நினைத்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் அந்தந்த பிராந்திய மொழிகளில் இருக்க வேண்டாமா?

— நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

பதற்றம்

பதற்றம் மனிதனுக்குத் தேவை. அப்போது தான் அவன் தனது பணியைச் செவ்வனே செய்ய முடியும். பதற்றம் அதிகரித்தாலோ மனோநிலை மிகவும் பாதிக்கப்படும். பதற்றத்தை எவ்விதம் புறக்கணிப்பது? சில வழி முறைகள்:

1 நினைத்த வேலையை உடனே செய்யுங்கள். அன்றாடம் செய்ய வேண்டிய பணிகளில் முக்கியமானதை முதலில் செய்யுங்கள். பதற்றமான சூழ்நிலைகளில் நீங்கள் தள்ளப் படும் போது சிறிது நேரம் ஓய்வெடுங்கள்.

2 கவலைகளைப் போட்டு நீங்களே குழப்பிக் கொள்ளாதீர்கள். உங்களை நேசிப்பவர்களிடம் பாரத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். எதற்கும் கொஞ்சம் வளைந்து கொடுங்கள்.

3 வேலையைப் பங்கிடுங்கள். தானே செய்ய வேண்டும் என்று எண்ணாதீர்கள். சிரிப்புடன் வாழக் கற்றுக் கொள்ளுங்கள். நகைச்சுவை வேலை பளுவை குறைத்து விடும்.

4 பொழுது போக்கைத் திட்டமிடுங்கள். அலுவல்களுக்கு நேரம் எப்படித் திட்ட மிடப்படுகிறதோ, அதுபோலவே பொழுது போக்கிற்கும் நேரம் ஒதுக்குங்கள். பொழுது போக்கில் உங்கள் மனம் ஈடுபடும் போது மாறுபட்ட சூழ்நிலையில் உங்கள் மனம் உற்சாகமடையும்.

5 மற்றவர்களுக்கு உதவுங்கள். முடிந்த வரை அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்றுக் கொள்ளுங்கள். நாம் தான் உலகி லேயே கஷ்டப்படுகிறோம் என்று எண்ணாதீர்கள். நல்லது!

சுட்டி வருட சந்தா ரூ. 10-00

ஆயுள் சந்தா ரூ. 150-00

FREE E - BOOKS , www.thamizham.net.,

வாசகர் எதிரொலி

மாலனின் கடிதங்கள் மிகச்சரியான இடங்களுக்குத்தான் அஞ்சலாகின்றன.

க. ம. சுந்தரன், ஆடுதுறை.

அட்டைப்பட கருத்து வரவேற்க தக்கதாக உள்ளது கடமையை செய்யாது உரிமை மட்டுமே கேட்கிறவர்களுக்கு இது நிச்சயம் உணர்த்தும்.

—M. அசோக், சென்னை - 600092.

புகை குறித்து வெளியிட்டிருந்த பயனுள்ள கட்டுரையினூடே நேரு புகை பிடிப்பது போன்ற புகைப்படத்தை வெளியிட்டிருந்தது பெரிய திகைப்பை உண்டாக்கியது.

—பி. எல். பரமசிவம், மதுரை - 1

மூன்று கவிதைகளில் முதலாவதும், இரண்டாவதும் ஐ.எஸ்.ஐ. தரம் கொண்டதாக இருந்தது.

—எஸ். மூர்த்தி, 625001

பத்திரிகை அலுவலகங்களை மிகத் துணிவோடு விமர்சித்த முதல் பத்திரிகை சுட்டி. சொல்லும் கருத்துக்களை தராசில் போட்டுத் தூக்கிப் பிடிப்பதைத் தொடருங்கள்!

—எஸ. வி. ராஜசேகர், சென்னை - 5

வாசகர் கடிதங் குறித்த விமர்சனம் சரியான தில்லை. வாசகர் கடிதம் எழுதுபவர்கள் தாழ்ந்தவர்களல்ல.

—எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

'பத்திரிகை அலுவலகங்கள்' கட்டுரை நூற்றுக்கு நூறு உண்மை. 1986 ஜூலையில் தினமலர் வாரமலர் ஒரு சிறுகதைப் போட்டி நடத்தியது. இன்றுவரை (87 ஜூலை) போட்டியின் முடிவு வெளிவரவில்லை.

—எஸ். இனியன், 525020.

என்ன பண்ணலாம், என்ன செய்யலாம் கட்டுரைகள் மாறுபட்ட நோக்குக் கொண்டவை.

—தாரகை, பெங்களூர்-53

FREE E - BOOKS , www.thamizham.net.,

கவியரசன் காலத்தின் குரல். ஏழைகளை வருடும் விரல். அவன் வியர்வையைப் பாட வேண்டும். உழைப்பின் போது எழும் உணர்வு பூர்வமான ஓசைகளில் அவன் கவிதை கலக்க வேண்டும். வைரமுத்து எப்படி......?

வைரமுத்து அற்புத கவியாற்றல் பெற்றவர் தான். ஆனால்...மார்க்ஸிய வேடதாரியாக இருந்துகொண்டு பங்களாக்களைப் பாடுகிறவர். நாத்திகன் என பிரகடனப் படுத்திக்கொண்டு பக்தி பாடல்கள் எழுதுகிறவர். 'ஏன் ஆபாசமான பாடல் களை எழுதுகிறீர்கள்' என்று கேட்டால் 'எல்லாவற்றையும் எழுதித்தான் ஆக வேண்டும். வீடு கட்டும் போது கக்கூஸை யும் கட்ட வேண்டியுள்ளதே!' என்று சீரழிவிற்கும் சிபாரிசு செய்வார். போகட்டும்.

வைரமுத்து கவியரசரா?

கவிஞர் இரா. வைரமுத்து என்று திரைப்பட டைட்டிலிலும் புத்தகங்களிலும் போடச் சொன்னார். பிறகு 'இரா' எடுக்கப்பட்டது கவிஞர் வைரமுத்து என்று பரிந்துரை செய்யப்பட்டது. இப்போது கவியரசு வைரமுத்து என்று போடச் சொல்லி வலியுறுத்துவதாக விபரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஒவ்வொரு பேட்டிலும் கண்ணதாசனோடு ஒப்பிட்டு பாரரட்டிக் கொள்ளும் வைர முத்து அவர்களே—

நீங்கள் கவியரசாக முயலுங்கள்.
கண்ணதாசன் ஆக வேண்டாம்.
கண்ணதாசனாக முயன்றால்
நீங்கள் எதற்கு?

—ஸ. ஜெ. சூர்யா

FREE E - BOOKS , www.thamizham.net.,

அ சு த் த ம்

"அம்மா ஒன்னுக்கு வருதும்மா..."

"இப்படியே ரோட்டு ஒரத்துல இருடா..."

"என்னங்க இது, இப்படியெல்லாம் ரோட்டை அசுத்தப்படுத்தறீங்க..."

"சின்ன பையன்தானுங்களே..."

"பையனா இருந்தாலும் அசுத்தம் அசுத்தம்தானே! எங்க ஊரிலெல்லாம் இம்மாதிரி குழந்தைகளுக்கு நேப்கின் கட்டாம வெளியே கூட்டிக்கிட்டு வரமாட்டோம். மலம், மூத்திரம் எதுவானாலும் அந்த நேப்கின் உறுஞ்சிக் கொள்ளும். மேலே போட்டிருக்கிற உடைகூட அழுக்கு ஆகாது. வீடு திரும்பியதும் நேப்கினை எடுத்து சுத்தம் செய்துவிடுவோம். இப்படியெல்லாம் வீடு, ரோடு எல்லாவற்றையும் அசுத்தம் செய்ய விடமாட்டோம்..."

"அடபோங்க நீங்க... அந்த மாதிரி நேப்கின் எல்லாம் இங்க இல்லிங்க."

"என்னங்க இப்படி சொல்றீங்க. எங்க ஊரைப்போல அழகான வண்ண வண்ண பெட்டிகள்ள பால், ஜூஸ், விதவிதமான சாக்லெட்டுகளையெல்லாம் தயார் பண்றீங்க. கொஞ்சம் முயற்சி செய்து குழந்தைகள் நேப்கின் தயாரிக்க முடியாதா? அப்படி தயாரித்து மலிவு விலையில் விற்பனை செய்தால் எவ்வளவு அசுத்தத்தைக் குறைக்க முடியும்?",

—சென்னை பஸ்-ஸ்டாண்ட் ஒன்றில் 2 வயது குழந்தையுடன் நின்றிருந்த நம் நாட்டுப் பெண்மணிக்கும் அவரது தோழியான மலேஷிய நாட்டுப் பெண்ணுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலிலிருந்து. — ரேவதி

தொடர்பு முகவரி:

AP 638, H பிளாக், அண்ணா நகர்,

சென்னை—600040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

டி. ராஜேந்தரின் சீரழிவுகள்

1. இவரது படங்களில் இடம்பெறும் கல்லூரிகள் காதலர் பூங்காவாக சித்தரிக்கப்படுகின்றன. மாணவர்கள் பெண்களை கிண்டல் செய்வார்கள். கொச்சையான இரட்டை அர்த்த வசனங்களை உதிர்ப்பார்கள். மாணவர்கள் மத்தியில் இவையாவும் சிதைவை ஏற்படுத்துகின்றன.

2. பணத்தையும்' பிலிம்சுருளையும், வண்ணங்களையும் வாரி இறைத்து இவர் போடும் செட்டிங்குகள் விழிகளை பலாத்காரம் செய்கின்றன இவை மனிதனை கனவுகளில் சஞ்சரிக்க செய்து, யதார்த்த உலகத்திலிருந்து வெளியேற்றி, தற்போதைய பிரச்சனைகளிலிருந்து திசை திருப்புகிறது.

3. தமிழ் திரைப்படங்களின் முக்கிய பாத்திரம் வகிப்பது பாடல்கள். இவரது பாடல்கள் முடியிழை மாறுபாடுகளுடைய ஒரேமாதிரியான பாடல்கள்-கவிஞனுக்குரிய எவ்வித யோக்கிதையுமின்றி திணிக்கப்படுகிற வார்த்தைக் குப்பைகள். முக்கல் முணகல் போன்ற விஷயங்கள் காம உணர்வைத் தூண்டுகின்றன.

4. வசனங்களோ கேட்கவே வேண்டாம். தொல்காப்பியர் காலத்தை திரும்ப அழைக்கிற மெட்டுபட்டு, கோடை, வாடை, ...போன்ற சொல் ஜாலங்கள். அதுமட்டுமல்ல, படம் முழுவதும் எல்லா பாத்திரங்களும் சந்தத்தோடு பேசுகின்றன. இதை ரசித்து கைத்தட்டி மகிழ்கிற ரசிகர்களின் கரங்களின் மீது நமக்குக் கோபம் ஏற்படுகிறது.

5. அகில உலக இவரது ஒரே பிரச்சனை; காதல் தோல்வி, தாடி வளர்த்தல்.

6. எந்தவித டெக்னிகள் அறிவுமின்றி இவர் செய்கிற சகலகலா வல்லத்தனம் விஞ்ஞானத்தை கேலி செய்கிறது.

7. இளைஞர்களை தனக்கு சாதகமாக்கி போஸ்டர் ஒட்டவும், தோரணம் கட்டவும் சம்பளம் வாங்காத வேலையாள்களாக நியமித்துக்கொள்கிறார்.

★ சீரழிவுகளின் பட்டியல் நீளும். சுருக்கமாகச் சொன்னால் டி. ராஜேந்தர் திரைப்பட உலக அவமானங்களில் ஒருவர்.

—நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

எமக்கு வந்தவை

தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள் (25.00) — க. ப. அறவாணன் ஐந்திணைப்பதிப்பகம், 282, திருவல்லிக்கேணி, சென்னை-600005.

குயிலும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் (5. 00) — நாரா. நாச்சியப்பன்—தமிழாலயம், 137, ஜானி ஜான் கான் தெரு, சென்னை-600014.

புன்னகை புரியாத பூக்கள் — கவிதை தொகுப்பு (2.00) — கண்ணகி — சோலை வெளியீடு — கிடைக்குமிடம்; சோலை இசைக் குயில் 43, மே. ச. குப்பம், ரெட்டியூர், ஜோலார்பேட்டை 635851.

நமது மருத்துவ நலப் பிரச்சனைகள் (17.00) — அ. மார்க்ஸ்

இதயம் — கவிதை (3.00) — பராசு.

மார்பக நோய்கள் (6.00) — டாக்டர் சு. நரேந்திரன் — மேற்கண்ட மூன்று நூல்களும் கிடைக்குமிடம் சிலிக்குயில், 20, ப. கோதண்டபாணி தெரு, கும்பகோணம் 612001.

டி. ஜி. எஸ். தினகரன் ஒரு திருடன் கட்டுரை (2.00) — மெர்வின், 4, சபாபதி தெரு, குரோம்பேட்டை, சென்னை - 600044.

என்ன? ஏன்? எப்படி? - பொது அறிவு வினாவிடை (10.00) —நாரா. நாச்சியப்பன், தமிழாலயம் 137, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600014.

சிந்தனையாளர் தொல்காப்பியர் (3.00) லோ. சுப்பிரமணியன் — பிரேமா பிரசுரம், 35, ஆற்காடு சாலை, சென்னை-600024.

காற்றின் பாடல் — கவிதை (5.00) — சமயவேல் — கற்பகம் வெளியீடு, 46, ஆவுடையாபுரம் தெரு, தூத்துக்குடி - 628002.

FREE E - BOOKS , www.thamizham.net.,

வரதட்சணைக் கொடுமை......

● இந்திய நாட்டில் 1961-ம் ஆண்டு வரதட்சணை தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது வரதட்சணை கேட்டால் அல்லது கொடுத்தால் 5 வருட சிறைத்தண்டனையும், 5000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படும். இக்குற்றங்களை மீறுவோருக்கு ஜாமீன் வழங்கப்பட மாட்டாது இச்சட்டத்தில் 1984-ல் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இருந்தும் எதிர்பார்த்த பயன் ஏற்பட்டதா? இல்லை.

* * *

தமிழகத்தின் 4 கோடி 82 லட்சம் மக்களில் 2 கோடி 38 லட்சம் பேர்கள் பெண்கள். இந்திய மக்கள் தொகையில் சரிபாதி பெண்கள்.

1980முதல் 1986 மே மாதம் முடிய வரதட்சணை கொடுமைக்கு பலியாகி உள்ளவர்கள் தொகை: 2137. 1984க்குப் பிறகு உ. பி-யில் - 615. மகாராஷ்ட்ரம் - 292. பஞ்சாப் - 99. ராஜஸ்தான்-88, கர்நாடகா - 81.

சில அவலங்கள்

ஒருவர் பணத்திற்காக தனது 21 வயது மனைவியை பீகாரில் விற்றுள்ளார். வரதட்சணை தொகையில் மீதி பணத்தை சம்பாதிக்க நண்பனுடன் விபச்சாரத்தில் ஈடுபட மறுத்த மனைவியை கணவர் எரித்துக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் சில ஊர்களில் மணமகன் வீட்டாருக்குப் பெண்ணைப் பிடித்திருந்தால் அன்றே ரூ2500 மணமகன் வீட்டாருக்குக் கொடுத்தால் அவள் மணமகன் வீட்டாருக்கு உரிமையாகிறாள்.

அரசாங்கம் உருவாக்குகிற சட்டங்களை யார் மதிக்கிறார்கள்? பெண்கள் ஒருங்கிணைய வேண்டும். அரசும், அரசியல் கட்சிகளும் என்ன செய்துவிட முடியும்.

—எம். தாசம்மாள்

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுகாதாரம்

'ஈ' மொய்த்த பண்டங்கள் பறிப்பு
2500 இட்லி வடைகள் அழிக்கப்பட்டன
சுகாதார அதிகாரி நடவடிக்கை.

10—07—87 மாலை முரசு வெளியிட்ட செய்தி இது. பிளாட்பாரங்களில் வைத்து விற்கப்படும் உணவுப் பொருட்கள் இறைச்சி இவைகளை ஒழித்துவிட்டால் மட்டும சுகாதாரம் சீர்படும்? சாலைகளில் இட்லி வடை விற்கும் வியாபாரிகளுக்கும், அதை வாங்கி உண்ணும் ஏழை எளிய மக்களுக்கும் அரசு எந்த விதத்தில் சுகாதாரம் பற்றிய அறிவைப் புகட்டியுள்ளது?

சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்டதாலேயே ஹோட்டல்களில் பண்டங்களின் விலைஉயர்ந்து விடுகின்றனவே (இங்கும் சுகாதாரம் மோசமாகத்தான் இருக்கிறது) அந்த பண்டங்களை ஹோட்டல்களில் வாங்கும் பொருளாதார வசதி எல்லா மக்களுக்கும் இருக்கின்றதா?

பணக்காரரர், நடுத்தர வர்க்கத்தினர், ஏழை என்று பொருளாதார அடிப்படையிலான வேறுபாடுகளோடு தயாராகும் உடை, இருப்பிடங்கள், கல்விக்கூடங்கள், மருத்துவ மனைகள், செருப்பு ஆகியவற்றைப் போலத்தான் இங்கு உணவுப்பண்டங்களும் தயாராகின்றன...

ஈ மொய்த்த உணவுப் பண்டங்களை அழிக்கத் தெரிந்த சுகாதார அதிகாரிகளுக்கு கொசுவின் பிறப்பிடங்களான சாக்கடைகளை சீர்ப்படுத்தத் தெரியவில்லையா? மழைக்காலத்தில் ஆறா சாலையா என்று தெரியாத அளவிற்கு பல விபத்துக்களுக்கும், கொசு பெருக்கத்திற்கும் காரணமாகத் திகழும் சாலைகளை சரிசெய்யத் தெரியவில்லையா?

— நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

மேடைகள்

''திராவிட முன்னேற்றக் கழக மேடைகள் வெறும் அரசியல் கூட்டங்கள் அல்ல. அங்கே அறிவியல், பொருளாதாரம், சமூகம் என்று பல துறை பற்றியும் பேசப்படுவதால் அவை மாலை நேரக் கல்லூரிகள்'' என்று அண்ணாதுரை ஒரு முறை குறிப்பிட்டார்.

இன்றைய நிலைமை?

தி.மு.க. மட்டுமல்ல தமிழகத்தின் பெரும் பாண்மையான அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்கள் மிகக் கேவலமான வார்த்தைகளால் அலங்கரிக்கப் படுகின்றன.

மாலை நேரக் கல்லூரி அசிங்க வார்த்தை களின் அகராதியாக மாறிவருகிறது.

எதிர் கட்சியைச் சார்ந்த தலைவர்களை இப்படித்தான் தாக்குவது என்றில்லை....அவர் களது படுக்கையறையை விமர்சிக்கத் தொடங்கி அவர்களது வீட்டுப் பெண்களின் கற்பை ஆராய்வது வரை நீண்டு நெளிந்து செல்கிறது பேச்சாளரின் உரை.

தமிழகத்தின் பிராந்தியக் கட்சிகளின் நிலைதான் இது என்றால், தேசியக் கட்சியான காங்கிரஸும் 'எங்களால் இப்படிப் பேச முடியாதா? நாங்களும் சளைத்தவர்கள் அல்ல' என்று சவால் விடுகிற புதிய பேச்சாளர்களை வளர்த்து வருகிறது.

பெண்ணுரிமை பற்றி அக்கறையோடு பேசுகிற இக் கட்சிகள்தான் அரசியலுக்கு வரும் பெண்களை தரக்குறைவாகத் தாக்கு கின்றன.

கட்சிகள் இப்படி பேசுகின்றன என்றால் கேட்கிற கூட்டத்துக்கு மூளையில்லையா?

எச்சல் வழிய உட்கார்ந்து இப்பேச்சுக் களை ரசித்துக் கைதட்டி, விசிலடித்து...

—பிருந்தா சாரதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

தமிழ் மீடியம்

கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ்வழிக் கல்வியை அறிமுகம் செய்து ஏறத்தாழ இருபத்தி ஐந்து ஆண்டுகள் முடியப் போகின்றன. இந்நிலையில் அத்திட்டம் எந்த அளவுக்குப் பலனளித்திருக்கிறது என்பதை ஒரு கமிஷன் வைத்து ஆராய்வது தமிழ் நாட்டு மாணவர்களுக்கும் அரசுக்கும் நல்லது.

திட்டம் இன்று பல்கலைக்கழக மாணவரிடையே எதிர்பார்த்த அளவு பலனளிக்கவில்லை. எதிர்பார்த்த அளவு என்ன? அதில் பாதி அளவு கூட பலனளிக்கவில்லை.

B. A., B. Sc., பட்ட வகுப்புகளில் தோல்வியடையும் மாணவர்களில் 60 சதவீதத்திற்கும் மேலானோர் தமிழ் மீடியத்தில் படித்தவர்களே. இதற்கான காரணங்களில் முதன்மையானது பரிந்துரை செய்யப்படும் புத்தகங்கள் தாராளமாகக் கிடைக்காது தான்.

தமிழ் மீடியத்தை அறிமுகம் செய்த புதிதில் ஆங்கில மூல நூல்களை மொழியாக்கம் செய்வதற்கு ஒரு தொகை ஒதுக்கப்பட்டது. பாட நூல்கள் வெளியாயின. அதன் பிறகு அத்திட்டம் அரோகரா. புதிதாக மொழி பெயர்த்தவற்றை மறுபிரசுரம் செய்யவும் இல்லை.

மொழிபெயர்ப்புத் தவிர தமிழிலேயே மூல நூல்களை எழுதும் திட்டமும் போடப்பட்டது. ஆனால் அத்திட்டம் மொழி பெயர்ப்பு அளவுக்குக்கூட பேராசிரியர்கள் மத்தியில் வரவேற்பு பெறவில்லை. நமது பேராசிரியர்களில் பெரும்பான்மையோர் வெறும் மொழிபெயர்க்கும் பண்டிதர்களே. தவிர மூல நூல் எழுதும் அளவுக்கு ஆற்றல் இல்லாதவர்களோ என்று எண்ணும் அளவுக்கு இத்திட்டம் சோகை பிடித்தது. ※

— ருக்மணி குமாரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

இவர்கள் தமிழர்கள்

நகரில் வாழும் தமிழருடைய ஒரு குடும்பத்தை உற்றுப் பாருங்கள். அவர்களுடைய உறைவிடம் ஐரோப்பிய முறையில் அமைக்கப்பட்டது. அவர்தம் உணவுகள், பல் துலக்கும் முன் 'காப்பி', பல் துலக்கியபின் 'டிபன்,' பூரி, சப்பாத்தி, குருமா, பிரட், சாம். பள்ளிக்குப் புறப்படும் குழந்தைகள் தமிழ் நாட்டு வெப்பத்திற்கு ஆகாத கால் முதல் தலை வரை மூடிய உடைகள். இடையிடையே குழந்தைகளின் 'மம்மி' 'டாடி' அழைப்புகள். அரைகுறை ஆங்கிலத்தில் உரையாடல்கள்.

கறுப்பு இதழுக்கு அம்மா போட்டுக் கொள்ளும் சிவப்புச் சாயம். மருதோன்றிச் சிவப்பு இருக்க வேண்டிய நகங்களில் போலிப் பூச்சு. சின்ன வயதில் எழிலான மூக்குத்தி அணிய இடப்பட்ட மூக்குத் துவாரத்தை மூடிய பவுடர் அழகு. நன்றாகத் தெரியும் கண்ணுக்குப் போலிக் கண்ணாடி; தமிழ் நாட்டு வெப்பத்திற்கே தகாத சப்பான் 'சாரி'. 'சாக்கெட்'.

இவற்றோடு அம்மா அதோ சினிமாவுக்குப் புறப்பட்டு விட்டாள். பள்ளிக்குப் போன பிள்ளைகள் படிப்பது ஆங்கிலம். அலுவலகத்தில் சென்ற அப்பா எண்ணுவதும், எழுதுவதும் ஆங்கிலத்தில். மாலை கோயிலுக்குச் சென்றால் 'சமஸ்கிருதம்'. நீதிமன்றத் தீர்ப்பைக் கேட்டால் 'ஆங்கிலம்'. வானொலி, தொலைக் காட்சி, தில்லி மைய அரசு நிறுவன "வாய்' களைத் தொட்டால் 'இந்தி'. பாட்டு அரங்குக்குச் சென்றால் 'தெலுங்கு', 'இந்துஸ்தானி'' 'டிஸ்கோ'. ★

க.ப. அறவாணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

உங்களைப் பற்றி கூறுங்கள் . . .

ஒரு பிரஜை என்ற அளவில் நான் சமூக் வாழ்க்கைக்குத் தகுதியானவன்தான். என் வீட்டுக் கொல்லையைப் பெருக்கி அடுத்த வீட்டுக் கொல்லையில் கொட்ட நான் ஒருநாளும் இடமளிக்க மாட்டேன். எனது கைத்தடியைச் சுழற்றும் சுதந்திரம் எதிராளியின் மூக்கு நுனியோடு முடிவடைந்துவிடும் என்பது எனக்கு எப்பொழுதும் நினைவிருக்கும். அரசாங்க வரிகளை பாக்கி போடாமல் செலுத்துவதில் அக்கறை கொள்வேன். சொந்தப் பிணங்களை காடுவரையிலும் சென்று வழியனுப்பிவரப் பின்வாங்க மாட்டேன். அகாலத்தில் வந்து சேரும் விருந்தாளியின் பசி ஆற என்னால் ஆகக் கூடியதைச் செய்வேன். பொது நன்மைக்காகக் குலுக்கப்படும் உண்டியல்களில் என் காணிக்கையையும் செலுத்திட வேண்டுமென்றே நினைப்பேன். நட்புக்கு துரோகம் இழைக்காமலிருக்கக் கூடுமான வரையிலும் முயல்வேன். பொய்கள்

சுந்தர ராமசாமி

சொல்வதை—முற்றிலும் விட்டுவிடுவது சிரம சாத்தியமாகவே இருக்கிறது என்றாலும் —குறைத்துக் கொள்ள அந்தரங்க சுத்தமாகப் பாடுபடுகிறேன். ஒரு எழுத்தாளன் என்ற முறையில் நான் எதற்கும் பூரண விசுவாசம் செலுத்துகிறவன் அல்ல. நடைமுறை அர்த்தப் படி கட்சிகள், அரசாங்கம், சமூகம், மதம், தேசம் இவற்றிற்கெல்லாம் பூர்ண விசுவாசம் அளித்துவிடக் கூடாது என்பதை எனது இலக்கியக் கொள்கையின் ஒரு பகுதியாக நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு எனக்கு அளிக்கப்படுமென்றால் அதை நான் அவர்கள் முகத்தில் விட்டெறிந்து விடுவது என்பது என்னைப் பொருத்தவரையிலும் தவிர்க்க முடியாத காரியமாகவே இருக்கும். இதற்குக் காரணம் என்னுடைய இலக்கிய முன்னோர்களைக் கவுரவிக்கத் தவறியது மூலம், எனக்குப் பரிசளிக்கும் தகுதியை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்பதாகும்.

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்நூல்கள்
FREE E - BOOKS , www.thamizham.net.,